www.Padasalai.Net www.TrbTnpsc.com

VNR8T

விருதுநகர் மாவட்டம்
முழு ஆண்டுத் தேர்வு - 2025

வகுப்பு 8
தமிழ்

கால அளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி -1

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10×1=10

1) இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் ........... அணி
அ) பிறிதுமொழிதல் ஆ) வேற்றுமை இ) உவமை ஈ) சிலேடை
2) நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள்
அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம்
3) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ..........
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்
4) கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..........
அ) கதிரென ஆ) கதியீன இ) கதிரீன ஈ) கதிரின்ன
5) செவ்விந்தியர்கள் நிலத்தைத் .............. மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
6) முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ..........
அ) எதுகை ஆ) இயைபு இ) அந்தாதி ஈ) மோனை
7) நீலகேசி கூறும் நோயின் வகைகள் ..........
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
8) சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ............ தகுதி அறிந்து பேசவேண்டும்
அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்
9) கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ...........
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி
10) அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ..........
அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக** 5×1=5

11) வலியில் நிலைமையான் வல்லுருவம் ............
புலியின்தோல் ............. மேய்ந்தற்று
12) புற உலக ஆராய்ச்சிக்கு ............... கொழுகொம்பு போன்றது
13) பின்னலாடை நகரமாக .......... விளங்குகிறது
14) புத்த சமயம் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய நூல் ...........
15) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ............. என அழைக்கப்பட்டன.

**இ) பொருத்துக** 5×1=5

16) பெரிய - வென்றான் சோழன்
17) இயற்கை அன்பு - இயல்புப் புணர்ச்சி
18) மையல் - பெரிய புராணம்
19) மணிமுடி - விருப்பம்
20) வினைமுற்றுத்தொடர் - குறிப்புப் பெயரெச்சம்

பகுதி -2

**ஈ) குறுகிய விடையளி.**

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி.** 4×2=8

21) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
22) இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?
23) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
24) பகத்சிங் கண்ட கனவு யாது?
25) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி.** 4×2=8

26) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
27) தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
28) அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?
29) தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
30) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?

**இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி.** 2×2=4

31) எச்சம் என்றால் என்ன?
32) பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
33) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி -3

உ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3×4=12

அ) சிறுவினா

34) அ) மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது? (அல்லது)
ஆ) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக

35) அ) பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக (அல்லது)
ஆ) தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவமாற்றங்களை எழுதுக

36) அ) பிறிதுமொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத்தருக (அல்லது)
ஆ) தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

ஆ) சிந்தனை வினா

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி. 2×5=10

37) நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

38) நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

39) உழவுத் தொழில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருவன யாவை?

பகுதி -4

ஊ) அடிபிறழாமல் எழுதுக 4+2=6

40) அ) 'வழிவர் சிலர்கடல்' .......... எனத் தொடங்கும் 'படைவேழம்' மனப்பாடப்பாடல்
(அல்லது)
ஆ) 'ஓடை ஆட' முதல் 'போரா ரோடி!' வரை 'ஓடை' மனப்பாடப்பாடல்

41) 'இனிது' என முடியும் குறளை எழுதுக


பகுதி -5

எ) மொழிப்பயிற்சி 4×2=8

(எவையேனும் நான்கனுக்கு மட்டும்)

42) கலைச்சொல் தருக.
அ) Herbs
ஆ) Leadership

43) படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.



44) உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக
அ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது
ஆ) தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது

45) உவமைத்தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.
அ) உடலும் உயிரும் போல
ஆ) கிணற்றுத் தவளை போல

46) வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக
அ) உறங்கினாள்
ஆ) வருக

47) சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக
அ) சோறு ........... (தின் / உண்)
ஆ) கூகை ............ (கூவும் / குழறும்)

பகுதி -6

ஏ) விரிவான விடையளி 3×8=24

48) வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றி அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக (அல்லது)
தாய் மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக

49) குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக (அல்லது)
திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக

50) கட்டுரை எழுதுக
நான் விரும்பும் கவிஞர் (அல்லது)
இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

- - - - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com